www.kalvikural.com

**// தனி கவனம் //** **// மிக மிக அவசரம் //**

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.7950/அ3/2019 நாள் 25.06.2019

---

பொருள் : பள்ளிக் கல்வி – 01.08.2018 அன்றைய நிலவரப்படி மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்கள் நிர்ணயம் செய்தமை – ஆசிரியருடன் உபரி எனக் கண்டறியப்பட்ட ஆசிரியர்களின் (Surplus Post with Person) விவரம் – கூடுதல் விவரங்களுடன் அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை : 1.சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.078514/சி3/இ1/2018, நாள் 03.12.2018
2. அரசாணை எண்.(1டி) எண்.217, பள்ளிக் கல்வி (ப.க.து.)த் துறை நாள் 20.06.2019

---

பார்வை (1)ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் மற்றும் பார்வை (2)ல் காணும் ஆசிரியர்களுக்கான பணிநிரவல் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு அரசு / நகரவை உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் 01.08.2018 அன்றைய மாணவர்களின் எண்ணிக்கை நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர்கள் நிர்ணயம் செய்து அதில் ஆசிரியருடன் உபரி (Surplus Post with Person) என கண்டறியப்பட்ட ஆசிரியர்களின் விவரம் பள்ளி வாரியாக இத்துடன் படிவம் –1ல் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள பாடங்களில் தற்பொழுது பணிபுரியும் பள்ளியில் பட்டதாரி ஆசிரியர் / இடைநிலை ஆசிரியர் உபரி பணியிடத்திலுள்ள உபரி ஆசிரியரை Station Junior தேர்வு செய்யும் போது அரசாணை (1டி) 217, நாள் 20.06.2019–ல் தெரிவித்துள்ள கீழ்கண்ட விவரங்களில் அடிப்படையில் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

1. இடைநிலை / பட்டதாரி ஆசிரியர்களில் பாடவாரியாக உபரி என கண்டறியப்பட்டு அவர்கள் பள்ளியில் கடைசியாக பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு Station Junior என்பதை சார்ந்த தலைமை ஆசிரியர்கள் தயார் செய்தல் வேண்டும்.
2. ஒரு பள்ளியில் உபரி என கண்டறியப்பட்ட பணியிடத்தில் அப்பாடத்தில் Station Junior இரு ஆசிரியர்கள் ஒரே தேதியில், ஒரே நேரத்தில், பணியில் சேர்ந்திருந்தால். அவ்விரு ஆசிரியர்களில் உபரி ஆசிரியரை கண்டறிய முதலில் பட்டதாரி ஆசிரியர் பதவியில் பணிவரன்முறை செய்த நாளை (Date of Regularisation) அடிப்படையாக கொண்டு இளையவரை கண்டறிதல் வேண்டும். அவரே Station Junior ஆவார். மேலும் இரு ஆசிரியர்களின் பணிவரன்முறை தேதியும் ஒன்றாக இருக்கும் பட்சத்தில் பிறந்த தேதியின் அடிப்படையில் இளையவரை தேர்வு செய்தல் வேண்டும்.
3. உபரி ஆசிரியர்கள் Station Junior என்பதை தெரிவு செய்யும் போது அவர்கள்

அ.சு

www.kalvikural.com

பட்டதாரி ஆசிரியர் பதவியில் அலகு விட்டு அலகு மாறி (Unit Transfer) பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு Station Junior தேர்வு செய்தல் வேண்டும்.

4. உபரி எனக் கண்டறியப்பட்டுள்ள ஆசிரியர்கள் அலகு விட்டு அலகு மாறுதல் பெற்று பணியில் சேர்ந்திருப்பின் சார்ந்த ஆசிரியரின் பணிப்பதிவேடு நகலினை படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
5. முற்றிலும் கண்பார்வையற்றவர் (Total Blindness), மாற்று திறனாளிகள் சட்டம் 1995 –ன்படி 40% மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர் (மாற்று திறனாளிகளுக்கான மாநில ஆணையத்தினரால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்) அவர்கள் விருப்பப்படின் பணிபுரியும் இடத்திலேயே தொடர்ந்து பணி செய்ய முன்னுரிமை உண்டு. அவருக்கு பதில் அவருக்கு முந்தைய முதுநிலை உள்ளவரை உபரி ஆசிரியர் பணியிடத்தில் Station Junior என குறிப்பிடுதல் வேண்டும். மேலும் படிவத்துடன் மாற்றுத் திறனாளிகளுக்கு அடையாள அட்டையின் நகல் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
6. விதவைகள் மற்றும் 40 வயதை கடந்து திருமணம் செய்து கொள்ளாத பெண் ஆசிரியர்கள், ஆசிரியர்களாக பணிபுரியும் இராணுவ வீரர்களின் மனைவி, இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள், கடுமையாக பாதிக்கப்பட்ட புற்று நோயாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய மற்றம் மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள் ஆகியோருக்கு பணிநிரவலில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. எனவே, இதற்கான முன்னுரிமை பெற உரிய ஆவணங்களை சார்ந்த தலைமை ஆசிரியர் பரிசீலனை செய்து அதில் கையொப்பமிட்டு படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேலே அரசாணையில் தெரிவித்துள்ள விவரங்களின் அடிப்படையில் பட்டதாரி / இடைநிலை ஆசிரியர் பதவியல் Station Junior தேர்வு செய்து உரிய படிவத்தில் பூர்த்தி செய்து உரிய இணைப்புகளோடு இவ்வலுவலக 'அ3' பிரிவில் 27.06.2019 காலை 11.00 மணிக்குள் நேரில் சமர்ப்பிக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. படிவம் – 1 (உபரி ஆசிரியர்கள் பணிபுரியும் பள்ளிகளின் பெயர் பட்டியல்)
2. சான்று
3. அரசாணை எண் 217

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
அரசு / நகரவை உயர் / மேல்நிலைப்பள்ளி
நகல்
சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

அ.சு

www.kalvikural.com

## படிவம் – 2
## சான்று

பள்ளியின் பெயர் :

உபரி பணியிடத்தில் (Station Junior) குறிப்பிட்டுள்ள ஆசிரியர்களின் விவரம் ஆசிரியரின் வருகைப் பதிவேடு, பணிப்பதிவேட்டிலுள்ள விவரங்கள் மற்றும் EMIS (Educational Management Information System) உள்ள விவரங்களின் அடிப்படையில் சரியாகவுள்ளது எனச் சான்றளிக்கிறேன்.

தலைமையாசிரியர் கையொப்பம்